Registered as a News Paper

விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாதி 13 ( 29 - 09 - 1991 ) ஞாயிற்றுக்கிழமை ஓசை: 223

## சகல பங்கீட்டு அட்டைக்கும் உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சகல பங்கீட்டு அட்டைகளுக்கும் கட்டுப்பாட்டு விலையில் உணவுப் பொருட்கள் வழங்கப்படும் என யாழ். அரசாங்க அதிபர் தெரிவித்தார். வருமான வித்தியாசம், குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளாது பங்கீட்டு அட்டை வைத்திருக்கும் சகலருக்கும் உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன. ஒவ்வொரு பங்கீட்டு அட்டைக்கும் எதிர்வரும் முதலாம் திகதி முதல் பத்து கிலோ அரிசி, ஆறு கிலோ மா ஒரு கிலோ சீனி, இரண்டு பைக்கற் பால்மா, ஒரு கிலோ (4 ஆம் பக்கம் பார்க்க)

# 'இராணுவத்திற்கு மணலாற்று போர் சாதகமாக இருக்கவில்லை'

## அரசு கூறுவதைவிட இழப்பு பல மடங்கு

(கொழும்பு)

"முல்லைத்தீவு மணலாற்றுக் காட்டுப் பகுதியில் இராணுவ அதிகாரிகள் தெரிவிப்பதுபோன்று நிலைமை ஒன்றும் இராணுவத்தினருக்குச் சாதகமாக இருக்கவில்லை இராணுவம் ஒப்புக்கொண்டதைவிடப் பல மடங்கு உயிரிழப்பு இராணுவத்திற்கு ஏற்பட்டிருக்கலாம். குடிநீர் கிடைக்காமல் இராணுவம் அவதிப்பட்டது." இவ்வாறு மணலாறுப் போர் தொடர்பாக பி. பி. ஸி- அறிவித்தது.

முல்லைத்திவு-மணலாற்றுக் காட்டுப்பகுதியில் தாக்குதலை நிறுத்தும் முடிவை இராணுவம் மேற்கொண்டது என்று இராணுவ அதிகாரி கூறுவதை ஏற்றுக்கொண்டாலும் கூட இராணுவ அதிகாரி கூறியது போல் நிலைமை இராணுவத்தினருக்குச் சாதகமாக இருக்கவில்லை

இதேவேளை மணலாறு (4 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் மாவட்டத்தில் ஊரடங்கு உத்தரவு

மன்னார்த்தீவு தவிர்ந்த மன்னார் மாவட்டத்திலும், வவுனியா மாவட்டத்தில் செட்டிக்குளம் உதவிஅரசாங்க அதிபர் பிரிவிலும்நேற்றுமுதல் ஊரடங்குச்சட்டம்அமுலபடுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்

சிறிலங்காபாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் நேற்று விடுத்துள்ள அறிக்கையொன்றில் நேற்று நண்பகல் 12மணியிலிருந்து ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதாகத்

## இராணுவ நடவடிக்கை தொடரும்

# யுத்த நிறுத்தம் பற்றிய பத்திரிகைச் செய்தி தவறு

## படிவங்களுக்கு தட்டுப்பாடு

யாழ் மாவட்டத்திலுள்ள அரசாங்க வைத்தியசாலைகள் மத்திய மருந்தகங்கள் அரச திணைக்களங்களில் சில அத்தியாவசிய படிவங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதன்காரணமாக மக்களது அத்தியாவசிய தேவைகள், நிர்வாக தேவைக்காகப் பயன்படுத்தப்படும் பதிவேடுகளுக்கும், படிவங்களுக்கும் பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது எனத்தெரிவிக்கப் படுகிறது

## வயோதிபத் தம்பதிகள் விடுதலை

(வடமராட்சி கிழக்கு)

வெற்றிலைக்கேணி சிறிலங்கா இராணுவ முகாமில் கடந்த இரண்டு மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த வயோதிபத் தம்பதி (4ம் ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கே பார்சல் அனுப்பத்தடை

வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு அஞ்சல் அலுவலகம் ஊடாகப் பார்சல்கள் அனுப்ப முடியாதுளனகொழும்புதபால் திணைக்களம் தெரிவித்தது.

கடந்த சில வாரங்களாக அஞ்சல் அலுவலகம் ஊடாக பொருள்கள் வடக்குக் கிழக்கில் உள்ள உறவினர்களுக்கு கொழும்பிலுள்ளவர்களால் அனுப்பப்பட்டுவந்தது தெரிந்ததே. ஆனால் கடந்த வாரம் முதல் பார்சல்களை ஏற்கத் தபால் திணைக்களம் மறுத்துவிட்டதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன (ச

## "புலிகளின் குரல்"

## ஓராண்டு நிறைவையொட்டி நாடக, கவிதைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

"புலிகளின் குரல்" வானொலியின் ஓராண்டு நிறைவையொட்டி வானொலி நாடகப்பிரதி, சிறுகதை, கவிதைப் போட்டிகள் நடாத்தப்படவிருக்கின்றன.

இ போட்டிக்குரிய ஆக்கங்களை அடுத்தமாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் புலிகளின் குரல், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

இப்போட்டி தொடர்பாக வெளிவந்த செய்திக் குறிப்பில் போட்டிகள் தொடர்பாக சில விதிமுறைகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

வானொலி நாடகம் 20 நிமிடங்களுக்குள் ஒலிபரப்பக் கூடியதாகவும், 15 பக்கங்களுக்கு மேற்படாமலும், சிறுகதை எட்டுப் பக்கங்களுக்கு மேற்படாமலும், கவிதை மூன்று நிமிடங்களுக்கு குறையாமலும் ஐந்து நிமிடங்களுக்கு மேற்படாத நேரத்தில் ஒலிபரப்பக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

சிறுகதைகள் இங்கு முன் ஒலிபரப்பாகாததாகவும், பிரசுரிக்காததாகவும் இருத்தல் (4ஆம் பக்கம் பார்க்க)

# மன்னார் மாவட்டத்தில் ஊரடங்கு உத்தரவு

மன்னார்த்தீவு தவிர்ந்த மன்னார் மாவட்டத்திலும், வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம் உதவிஅரசாங்க அதிபர் பிரிவிலும்நேற்றுமுதல் ஊரடங்குச்சட்டம்அமுலபடுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்காபாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் நேற்று விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் நேற்று நண்பகல் 12 மணியிலிருந்து ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளது

## ஆயுதம் வழங்கியதை ஆராய பாராளுமன்ற தெரிவுக்குழு நியமிக்க வேண்டும்

லக்ஸ்மன் கிரியெல்ல

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் கொடுத்தது தொடர்பாக ஆராய பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளைக் கொண்ட தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணைமீது பேசிய லக்ஸ்மன் கிரியெல்ல புலிகளுக்கு ஆயுதம் கொடுத்ததை ஆட்சித் தலைவர் தெரிந்து வைத்திருந்தாரா? தெரியா திருந்தாரா? இராணுவம் தன்பாட்டில் ஆயுதம் கொடுத்ததா? இல்லை புலிகளுக்கு ஆயுதம் விற்கப்பட்டதா? என்பன போன்ற விவகாரங்களை உத்தேச தெரிவுக்குழு விசாரிக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்டவரின் நடவடிக்கைகள் பற்றிக் கேள்வியெழுப்ப எமக்கு அதிகாரம் இருக்க வேண்டும். இல்லையேல் பாராளுமன்றத்தில் நாம் அங்கம் வகிப்பதில் அர்த்தம் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

## தொண்டமான் புலிகளுடன் பேசுவதில் தவறென்ன?

(கொழும்பு) -தேவராஜ்

அமைச்சர் தொண்டமான் புலிகளுடன் பேசமுற்சிப்பது முக்கியமான நடவடிக்கை. இதில் என்ன தவறு இருக்கிறது? தற்போதைய யுத்தம் தொடரத்தான் வேண்டுமா? பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணக் கூடாதா? என கடந்த புதன் கிழமை பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார் இந்துசமய கலாசார இராஜாங்க அமைச்சர் பி.பி. தேவராஜ்.

அவர் தொடர்ந்து பேசுகையில் தமிழ் மக்களை சுதந்திரமாக வாக்களிக்கச் செய்ய காட்டில் புலிகளுடன் சுதந்திரக் கட்சியினர் பேச்சுவார்த்தை நடத்தினர். இது அப்போதைக்கு பொருத்தமானதாக இருந்தது.

அரசு புலிகளுக்கு எதிராக யுத்தம் நடத்துகிறது. ஆனால் புலிகளுக்கு ஆயுதம் கொடுத்ததாக எதிர்க்கட்சி தரப்பில் கூறப்படுகிறது. இப்படியான கூற்றுக்கள் நாட்டுக்கு நல்லதல்ல. நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு கட்சி வேறுபாடுகளை மறந்து செயற்பட

(4 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்த நிறுத்தம் பற்றிய பத்திரிகைச் செய்தி தவறு

இராணுவ தளபதி ஹமில்டன்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன அல்லது வாபஸ் பெறப்பட்டுள்ளன என்று உள்ளூர் பத்திரிகைகளும், செய்தித் தாபனங்கள் சிலவும் வெளியிட்டசெய்திகள் தவறானவை என்று இராணுவத் தளபதி ஹமில்டன் வணசிங்கா இலங்கை வானொலி, ரூபவாஹினி என்பனவற்றிற்கு ஊடாக விடுத்த அறிவித்தலில் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் மணலாற்றுப் பகுதியில் இராணுவத்தினரின் இலக்குகள் நிறைவேறியுள்ளதை அடுத்தே

(4 ஆம் பக்கம் பார்க்க)

# உள்ளூர் பத்திரிகை செய்திக்கு ஜனாதிபதி செயலகம் மறுப்பு

(கொழும்பு)

ஈரோஸ் பிரதிநிதிகள் இருவர் கடந்த வியாழக்கிழமை பிற்பகல் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவைச் சந்தித்து நிபந்தனையற்ற விதத்தில் யுத்த நிறுத்தத்தை பிரகடனம் செய்யுமாறு சிறிலங்கா ஜனாதிபதியைகேட்டுக் கொண்டதாக உள்ளூர் பத்திரிகைகளில் வெளியானஊர்ஜிதமற்ற செய்திகளை சிறிலங்கா ஜனாதிபதி செயலகம் மறுத்துள்ளது.

நேற்று இந்த அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் இந்த மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

உண்மை நிலைக்கு புறம்பாக திரித்து இச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது என்றும் பிரேமதாசாவிற்கும் ஈரோஸ் பிரதிநிதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போது அவர்கள் கொழும்பில் தாம் தங்குவது பற்றியும், தமது இயக்கத்திற்கு குறிப்பாக அடுத்த மாதம் 8 ஆம் திகதிக்குப் பின்னர் பாதுகாப்பு அளிப்பது குறித்தும் எடுத்துரைத்தார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈரோஸ் இயக்கத்தினர் பாராளுமன்றத்தில் தமது உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் செய்து கொள்வதற்கு விருப்புவதாக பிரேமதாசாவிற்கு அறிவித்துள்ளார்கள்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## குற்றச்சாட்டு மனு பற்றி விசாரணை வேண்டும்

சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டதான ஜனாதிபதிக்கு எதிரான குற்றச்சாட்டு மனு என்று அழைக்கப்படும் மகஜர், கையெழுத்தும் திகதியும் இன்றி விநியோகிக்கப்படுகிறது. இது தொடர்பாக பொலிஸ் மா அதிபர் தலைமையிலானவிசாரணையொன்றை சபாநாயகர் ஆரம்பிக்க வேண்டும் என்று ஐ.தே. கட்சி பாராளுமன்ற உறுப்பினர் கலிங்க அபயவன்சா கோரியுள்ளார்.

அபயவன்சா சபாநாயகருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில், எவர் இவ்வகையான ஒரு ஆவணத்தைச் சபாநாயகரிடம் சமர்ப்பித்தாரோ, அவர் தன் பெயரை அதை வெளியிடுவதுதான்

(4 ஆம் பக்கம் பார்க்க)

...மேற்படாதநேரத்தில் ஒலிபரப்பக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

சிறுகதைகள் இதற்கு முன் ஒலிபரப்பாகாததாகவும், பிரசுரிக்காததாகவும் இருத்தல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா காவலரணில் சம்பவம்

# இராணுவம் சுட்டதால் பொலிஸ்காரர் மரணம்

மன்னார் - வவுனியா வீதியில் உள்ள வேப்பங்குளம் பாதுகாப்பு அரணில் கடமையில் ஈடுபட்டிருந்த ரிசேர்வ் பொலிஸ்காரர் ஒருவர் இவருடன் கடமையிலீடுபட்டிருந்த இராணுவ வீரர் ஒருவரால் சுட்டுக்கொல்லப்பட்டதாகச் சந்தேகிக்கப்படுகின்றது.

இருவருக்குமிடையில்நடந்த வாய்ச் சண்டையே இந்தக் கொலைக்குக் காரணமாகும் என்று தெரிவிக்கப்படுகிறது. இராணுவச் சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளார்.

கெக்கிராவ இம்பாகமுவ என்ற இடத்தைச் சேர்ந்த ஜெயசேகர என்பவரே பலியானவராவார்.

## காரைநகரில் மீன் பிடிக்க இராணுவம் கட்டுப்பாடு

காரைநகரில் தங்கியிருக்கும் மீனவர்கள் மீன் பிடிப்பதற்கு கடற்படையினர் பல கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர். குறிப்பிட்ட பகுதிகளில் மட்டும் அதிலும் குறிப்பிட்ட நேர இடைவெளிகளில் மட்டுமே இவர்கள் மீன் பிடிப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

காரைநகரில் இராணுவத்தினரின் பிடியில் சிக்கி நேரடி

(4 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தம் தொடர்ந்து நடைபெறுகிறது போராட மக்கள் அணிதிரளவும்

(வவுனியா) - யோகி

சிறிலங்கா அரச படையினருக்கும் எமக்கும் இடையே யுத்தம்நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில் மக்கள் அணிதிரண்டு எதிரிக்கு எதிராக போராட வருவதைப் பொறுத்தே, நாம் எமது எல்லைக்குள் நின்று போராடுவதா அல்லது வெளியில் நின்று போராடுவதா என்பது தீர்மானிக்கப்படும். இதைத் தீர்மானிக்க வேண்டியவர்கள் நீங்கள்தான்.

கடந்த 26 ஆம் திகதிஇரவு வவுனியா காக்கையன் குளம் பகுதியில் இடம்பெற்ற லெப். கேணல் திலீபனின் நான்காம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசும் போது, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் திரு. யோகரட்ணம் யோகி அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது, நாம் எமது மண்ணை மீட்டு தமிழீழம் அமைப்போம் என்ற நம்பிக்கையில் தான் போராடிக் கொண்டிருக்கின்றோம். இந்த நம்பிக்கையில்தான் மூவாயிரம் போராளிகள் உயிரை அர்ப்பணித்துள்ளனர் என்று குறிப்பிட்டார்.

அந்நிய மண்ணிலிருந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


அக்குபங்சர்
ஹோமியோபதி சிகிச்சை

கொழும்பு தெற்கு அரச வைத்தியசாலையில் கடமையாற்றும் விரிவுரையாளரினால், நாரிப்பிடிப்பு, மூட்டுவாதம், தொய்வு, கபாலக்குத்து, தோல்வியாதிகள் நரம்பு தொடர்பான தீராத 'நாட்பட்ட' நோய்களுக்கும் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது. மேலதிக விபரங்களுக்கு இல. 121/மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம், இல. 95 யாழ்வீதி மானிப்பாய், திருமதி சத்தியமூர்த்தி சுழுவேலடி லேன், கொக்குவில். (R/1785)

தேவை

பாலர் வகுப்பிலிருந்து A/L வரை தங்களால் இயன்ற பாடங்களைத் தனிப்பட்ட முறையில் கற்பிக்கக் கூடிய ஆசிரியர்கள் தேவை. மாலை 2-00 — 8-00ற்குள் சந்திக்கவும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை லோகேந்திரா வீதி, சுண்டுக்குளி. (R/ 1788)

கல்வி

புலமைப் பரிசில் வகுப்பிலிருந்து G. C. E. (O/L) வரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 40 வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் ஆரம்ப அறிவிலிருந்து விசேட முறையில் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டுக்குளி (R/ 1787)


## இரு இளைஞர் படையிடம் சிக்கினர்

(வடமராட்சி கிழக்கு)

வெற்றிலைக்கேணி மருதடிப் பாதைக்கு ஊடாக கொம்படிக்குச் சென்ற இரு இளைஞர்கள் சிறிலங்கா இராணுவத்திடம் சிக்கியுள்ளார்கள்.

வத்திராயனில் வசித்து வந்த பொ. சிவபாலன் என்பவரும், புளைப் பகுதியைச் சேர்ந்த மற்றொரு இளைஞருமே இராணுவத்திடம் சிக்கியதாகதெரியவருகின்றது.

இவர்கள் இருவரும் விசுவமடுவுக்குச் சென்றபோதே சிக்கியதாகத் தெரிய வருகின்றது. (36)

## காணாமற்போனவர் பற்றி நடவடிக்கை எடுக்கவும்

### சமாதானக்குழு கோரிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக்கால அசம்பாவிதங்கள் காரணமாக கடந்த வருடம் யூன் முதல் காணாமல் போனோர் பற்றி விசாரித்து உடனடி நடவடிக்கை எடுக்கும்படி மட்டு. சமாதானக்குழு சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிற்கு மகஜரொன்றை அனுப்பிவைத்துள்ளது.

அண்மைய அனர்த்தங்கள் காரணமாக மட்டு; மாவட்டத்தில் கணவனை அல்லது ஏனைய உறுப்பினர்களை இழந்த பல்வேறு குடும்பங்கள் காணாமல் போனவர்கள் தொடர்பாக ஆராய்வதற்குத் தங்களால் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு அறிவித்து வருகின்றன.

ஆனால் கடந்த 17-1-91 ஆம் திகதிக்கு முன் காணாமல் போனவர்கள் பற்றி விபரங்கள் சேகரித்து விசாரணையை மேற்கொள்ள முடியாதென்று மேற்படி ஆணைக்குழுவின் செயலாளர் விண்ணப்பதாரிகளுக்கு அறிவித்துள்ளார். இது அவர்களுக்கு அதிர்ச்சியையும், துயரத்தையும் தருவதாக உள்ளது.

ஏனெனில் காணாமல் போனோரில் பெரும் பகுதியினர் கடந்த யூன் 10 ஆம் திகதிக்குப் பின்னரே காணாமல் போயுள்ளனர். எனவே கடந்த யூன் மாதத்திலிருந்து காணாமல்போனோர் பற்றிய விபரங்களை ஆணைக்குழு விசாரித்து ஆவனசெய்யவேண்டும். இவ்வாறு அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டிருந்தது.

## 6 பேர் காயம்

(யாழ்ப்பாணம்)

லொறியில் இருந்து வீழ்ந்து ஆறு பேர் காயமடைந்துள்ளனர். கடந்த வியாழக்கிழமை மாலை புத்தூரில் நடைபெற்ற இச்சம்பவத்தின்போது லொறி ஒன்றின் பின் கதவில் நின்று பயணம் செய்த ஆறுபேர் கதவின் சங்கிலி அறுந்ததால் விழுந்து காயத்துக்குள்ளாகியுள்ளனர். (௧)

## சமுகமளிக்கவும்

(யாழ்ப்பாணம்)

மருதனார் மடம் கோட்டத்தில் கடமைபுரியும் சகல ஆசிரிய ஆலோசகர்களையும் நாளை திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு கோட்ட அலுவலகத்தில் சந்திக்கும்படி கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் ச. தனஞ்சயன் கேட்டுள்ளார்.


புதிய
உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

SPOKEN ENGLISH
by
BRITTO

ஆரம்பம்: 29-09-91
(இன்று 12 மணி)
(B/ 3212)

A/L 91, 92
REVISION, PAPER CLASSES
தாவரவியல்
திரு. பொ. ஐங்கரநேசன்
ஆரம்பம்
30-9-91 (திங்கள்) காலை 8-30 மணி
யூனிவேர்சல்
கந்தர்மடம், — யாழ்ப்பாணம்.
(B/3211)

பட்டப்படிப்புக்கள் கல்லூரி

புதிய மாணவர்களை
அனுமதித்தல் 91 92

யாழ். பேராதனைப் பல்கலைக்கழகங்களின் வெளி நிலைப்பட்டப் பாடநெறிகளான

கலை முதற் தேர்வு G. A. Q.

விஞ்ஞான முதற் தேர்வு G. S. Q.

வணிக முதற் தேர்வு (First In Commerce)

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி
19-10-91வரை
நீடிக்கப்பட்டுள்ளது

விரிவுரைகள்
20-10-91இல்
ஆரம்பமாகின்றன

விண்ணப்பப்படிவத்தினையும் விபரத் திரட்டையும் ரூபா 10 செலுத்தி நேரில் பெற்றுக்கொள்ளலாம்

விபரங்களுக்கு
உதவிப்பதிவாளர்
பட்டப்படிப்புகள்
கல்லூரி
148/1 ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.
(B-3200)

கோண்டாவில் வடக்கு ஸ்ரீ வாகீஸ்வரி
சனசமூக நிலையம் நடாத்தும்
மேஜர் மைக்கன்றோ அவர்களின் ஞாபகார்த்த
வெற்றிக் கேடயத்துக்கான மாபெரும்
உதைபந்தாட்டப்

போட்டி

(7 பேர் கொண்ட விலகல் முறையிலானது)

விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டிய முகவரி,
செயலாளர்
ஸ்ரீவாகீஸ்வரி சனசமூக நிலையம்

31ஆம் நாள் நினைவஞ்சலி

நினைவ

மேஜர் மைக்கன்றோ அவர்களின் ஞாபகார்த்த
வற்றிக் கேடயத்துக்கான மாபெரும்
உதைபந்தாட்டப்

## போட்டி

(7 பேர் கொண்ட விலகல் முறையிலானது)

விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டிய
முகவரி,
செயலாளர்
ஸ்ரீவாகீஸ்வரி சனசமூக நிலையம்
ஜெயகரன் வீதி, (இன்சூர்)
சோண்டாவில் வடக்கு
சோண்டாவில்

விண்ணப்ப முடிவுத்திகதி:
10-10-1991 (B/1786)

## 3-ம் ஆண்டு நினைவலைகள்



உதயம்
22-06-1942

அஸ்தமனம்
30-09-1988

திதி
29-09-1991

அமரர்
### நமசிவாயம் புஸ்பநாதன்

எம்மை ஆறாத்துயரில் மூழ்கவைத்து
மீளாத் துயில் கொண்ட எங்கள்
அன்புத் தெய்வமே!
எம்மை அன்பாய், பண்பாய் வாழவழிகாட்டிய
எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே
நீங்கள் மறைந்து இன்றுடன்
மூன்றாண்டுகளானாலும்
என்றென்றும் உங்களை தேடும்
— எங்கள் நினைவலைகள்

தாய், மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.
280, பலாலி வீதி,
கந்தர்மடம். (B/3183)

கந்தர்மடம். — யாழ்ப்பாணம்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி





மேஜர்
### சுசி மாமா
வீரஜனனம்: 18-4-1964

லெப்டினன்ட்
### குமார்

வீரமரணம்: 29-08-1991

பூக்களின்
உதிர்வில்
பிறப்பது விதைகள்
ஆம்!
உங்களின்
மறைவில்
பிறந்திடும் புலிகள்

உங்களின்
மரணத்தில்
பொங்குது மனங்கள்
இனிமேலும்
உயர்ந்திடும்
எங்களின் கரங்கள்.

வவுனியா.

உயிர் நண்பர்கள்

(R/1789)

யாழ்ப்பாணம். (B-3200)

## நினைவு கூருகின்றோம்...

1991-09-29

1986 ஆம் ஆண்டு இதேதினத்தில் கொம்மாந்துறையில் சிறிலங்கா விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் காயமுற்ற நிலையில் சயனைட் உட்கொண்டு வீரமரணமெய்திய

ரவி (அருணானந்தம் ரவீந்திரகுமார்- வந்தாறுமூலை)

1987 ஆம் ஆண்டு திருக்கோணமலையில் சிறிலங்காப் படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்

1990 ஆம் ஆண்டு காங்கேசன்துறையில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரமரணமெய்திய

வேலு (சிவசாமி வேலு - பிரமணாலங்குளம், வவுனியா)

கட்டுவனில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரமரணமெய்திய

சிவதர்சன் (வவுனியா)

அனார்கலி/மீரா (சாம்பசிவம் சுவர்ணசுந்தரி - இிமுருகன் குடியேற்றம், வல்வெட்டித்துறை)

நாயகி/பவுண் (சாந்தி சின்னராசா - கோண்டாவில்)

ஆகியோரை இந்நாளில் நினைவு
கூருகின்றோம்.

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/8109)

# அதிகாரமற்ற மாநில முதலமைச்சர்களினால் பிரச்சினையை உருவாக்கலாம்; தீர்க்கமுடியாது

## மூன்றுமாத கால ஆட்சி ஜெயலலிதாவிற்கு உணர்த்திய பாடம்

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா பரபரப்பாக தனது மூன்று மாத கால ஆட்சியை முடித்துள்ளார். தமிழக சட்டசபையிலோ இந்தியாவின் ஏனைய மாநிலங்களிலோ, லோக்சபாவிலோ கூட வரலாறு காணாத பெரும்பான்மையுடன் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற செல்வி ஜெயலலிதாவின் ஆட்சிக் காலம் பரபரப்பானதாக இருந்ததே ஒழிய பயனுள்ளதாக இருந்ததெனக் கூறிவிட முடியாது.

### அதிகாரமற்ற அமைப்பின் முதல்வர்

எதிர்க்கட்சிகளே அற்ற நிலை என்ற ரீதியில் செல்வி ஜெயலலிதா ஆட்சிபீடம் ஏறியபோது தாம் பெரும் பலத்துடன் ஆட்சிபீடம் ஏறுகிறேன் என்ற எண்ணம் அவரிடம் இருந்ததே ஒழிய அதிகாரம் அற்ற ஓர் அமைப்பிற்கு தான் முதலமைச்சர் ஆகிறேன் என்ற எண்ணம் அவரிடம் இருக்கவில்லை என்றே கடந்த மூன்று மாத கால அவரது ஆட்சி எடுத்துக் காட்டியுள்ளது.

இந்தியாவில் சமஷ்டி ஆட்சி முறை நடைபெறுகின்றதெனக் கூறிக்கொண்டாலும் மாநிலங்களின் அதிகாரங்கள் மிக மிகக் குறைவாகும். இவ்வாறான ஒரு மாநிலத்தின் முதலமைச்சராக வந்த செல்வி ஜெயலலிதா பூரண இறைமையுள்ள நாடு ஒன்று கூட தன்னிச்சையாக செயற்பட முடியாத இரு நாடுகளுக்கு இடையிலான விவகாரங்கள், சர்வதேச நெறிமுறைகள் கடைப்பிடிக்க வேண்டிய விவகாரங்கள், மாநில அரசாங்கங்களுக்கு இடையிலான விவகாரங்கள் என்பவற்றை தனது முதன்மையான அரசியல் பிரச்சினையாக்கினார்.

பின்படி இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் நடந்து கொள்ளவில்லை. அது செல்வி ஜெயலலிதாவிற்கு விழுந்த முதலாவது அடியாகும். திரு. நரசிம்மராவ் அமைச்சரவையில் இணைந்து கொள்ளுங்கள் என ஒரு கோரிக்கையை விடாமை செல்வி ஜெயலலிதாவிற்கு பெரும் அவமானமாகவே இருந்தது. இதனை தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவரான வாழப்பாடி இராமமூர்த்தியினால் கூடவே பொறுத்துக் கொள்ளக்கூடியதாக இருக்க



வில்லை. இதன் காரணமாக செல்வி ஜெயலலிதா ஓரளவிற்கு மத்திய அரசிற்கு எதிரான போக்கை கடைப்பிடிக்கத் தொடங்கினார்.

அரசியலில் பரபரப்பையும், மர்மங்களையும் என்றும் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற கொள்கை கொண்டிருந்த ஜெயலலிதா தனது மூன்றுமாத ஆட்சிக் காலத்தில் ஒன்றுமாறி ஒன்றென மூன்று முக்கிய விவகாரங்களை பிரச்சினையாக்கினார்.

### இலங்கைத் தமிழர் விவகாரம்

தி.மு.க. ஆட்சிக் கவிழ்ப்பிற்கு உதவுவதற்காக விடுதலைப் புலிகளுக்கும் இலங்கைத் தமிழருக்கும் எதிராக

### காவிரிநீர் விவகாரம்

அகதிகள் விவகாரத்தில் செல்வி ஜெயலலிதா கடைப்பிடித்த கடும்போக்கு தனது சக்திக்கு அப்பாற்பட்டதாகவும், பரபரப்பு அற்ற விடயமாக மாறிய வேளையில் காவிரிநீர் பிரச்சினையை முக்கிய பிரச்சினையாக செல்வி ஜெயலலிதா எடுத்துக்கொண்டார்.

காவிரிநீர் பிரச்சினை தற்பொழுது உருவானதல்ல. கடந்த நூறுவருட காலத்திற்கு மேலாகவே இப்பிரச்சினை தொடர்ந்து இருந்து வந்துள்ளது.

இந்த நிலையில் இப்பிரச்சினை தொடர்பான ஒரு தீர்வை உடன் ஜெயலலிதா எட்ட முனைந்தார். லட்சக்கணக்கான விவசாயிகளுடன் இப் பிரச்சினை இருந்தமையால் இது முழு தமிழ் நாட்டிற்கும் உரியதொன்றாகவே கருதப்பட்டது. இதன் மூலம் தனது பரபரப்பான அரசியலுக்கு வழிதேட முற்பட்டார்.

கடந்த யூன் மாதம் காவிரி நீர்ப் பிரச்சினை தொடர்பாக நடுவர் மன்றம் விதித்த இடைக்கால தீர்வை நிறைவேற்ற வேண்டும் என தமிழ் நாட்டு அரசாங்கத்தின் சார்பில் செல்வி ஜெயலலிதா கோரினார். இப்பிரச்சினையை எடுத்துக்கொண்டதன் மூலம் மத்தியிலுள்ள சிறுபான்மை அரசாங்கத்திற்கு நேரடியாக நெருக்கடியைக் கொடுக்கவும், தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கட்சிக்குள் நெருக்கடியை வளர்க்கவும் ஜெயலலிதா முயற்சித்தார்.

இவ்விவகாரத்தில் மத்தியிலுள்ள சிறுபான்மை அரசாங்

### கச்சதீவு விவகாரம்

இலங்கை அகதிகள் விவகாரம், காவிரி நீர் பிரச்சினையில் நடந்தவை, முட்டுக்கட்டைகள் ஏற்பட்டதைத் தொடர்ந்து மத்திய அரசாங்கத்திற்கான நெருக்கடியை கச்சதீவு விவகாரத்தில் இருந்து கொடுக்க தமிழக முதல்வர் முற்பட்டார்.

தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது குறித்தும் சிறிலங்கா இராணுவத்தினரின் அடாவடித்தனம் குறித்தும் குரல் எழுப்பிய முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா கச்சதீவு இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்டதே இதற்குக் காரணம் எனவும் கச்சதீவு இலங்கைக்கு கொடுக்கப்பட்ட ஒப்பந்தத்தை ரத்துச் செய்யுமாறும் கோரிக்கை விடுத்தார்.

அதேவேளை கச்சதீவை மீட்டெடுக்கப் போராட்டம் நடத்தவும் தயார் என சுதந்திர தினப் பேச்சில் அறைகூவலும் விடுத்தார். அதே வேளை, அடுத்த சட்டப் பேரவை கூட்டத் தொடரில் கச்சதீவு விவகாரம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் தமிழக சட்டப் பேரவை சபாநாயகர் அறிவித்துள்ளார்.

ஆனால், இவ்விவகாரம் தொடர்பாக மத்திய அரசாங்கம் எதுவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை. பெரும்பாலும் இனிமேலும் எடுக்கப் போவதில்லை. நேரு குடும்பத்தின் சிறப்பு மிக்க ஊழியரான தற்போதைய பிரதமர் நரசிம்மராவ் எது எப்படி வரினும் ஒருபோதும் இந்திரா காந்தி அவர்களால்

கொண்டு வருகின்றனர். இதற்கென தமிழ்நாடு அரசாங்கம் கோரிய 80 கோடி ரூபா உதவியை மத்திய அரசாங்கம் இதுவரை வழங்கவில்லை. இதனால் இவ்வார ஆரம்பத்தில் 'இந்து' பத்திரிகைக்குப் பேட்டி அளித்த தமிழக முதல்வர் புலிகள் விவகாரத்தில் மத்திய அரசு உறுதியாக இல்லை, அவர்களை ஒழிப்பதற்கு ஒத்துழைப்பு நல்கவில்லை என மத்திய அரசின் மீது குற்றம் சாட்டியுள்ளார்.

### எதிர்மறை விளைவுகள்

அதேவேளை, செல்வி ஜெயலலிதா இலங்கைத் தமிழருக்கும், விடுதலை புலிகளுக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கை தமிழகத்தில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது. இலங்கைத் தமிழரின் போராட்டத்திற்கு ஆதரவான சக்திகளும், தமிழ் நாட்டின் சுயநிர்ணய உரிமைக்கும் குரல் கொடுக்கும் சக்திகளும்



அதேவேளை தேசிய பந்தோபஸ்து சட்டத்தின் கீழ் 500க்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

### பிரச்சினைகளை மாற்றலாம் தீர்க்க முடியாது

இந்நிலையில் கடந்த தனது மூன்று மாதகால ஆட்சியில் மாநிலங்களின் குறுகிய அதிகார வரம்பை செல்வி ஜெயலலிதா உணர்ந்திருப்பார் என்றே கூறலாம். கடந்த ஆட்சியாளர்களைப் போன்றே பிரச்சினை மாறிப் பிரச்சினைக்குச் சென்று கொண்டிருக்கலாமே ஒழிய அதிகாரமற்ற மாநிலங்களின் முதலமைச்சர்கள் விலகத் தகுந்த பலத்துடன் ஆட்சிக்கு வரினும் மத்திய அரசாங்கத்தை மீறி எதையும் செய்துவிட முடியாது என்பது புரிந்திருக்கும்.

இதன் காரணத்தினாலேயே பஞ்சாப், காஷ்மீர் போன்ற மாநிலங்களில் மக்களின் பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சிக்குவந்த அகாலிதளத்திற்கும் தேசிய மாநாட்டுக் கட்சிக்கும் இறுதியில் மாநிலங்களின் சுயநிர்ணய உரிமையைக் கோருவதைத் தவிர வேறு வழி தெரியாமல் போய்விட்டது. அதேவேளை இந்திய மத்திய அரசு எப்பொழுதும் ஜனநாயக ரீதியான ஆட்சியாளருக்குத்தான் உதவும் என்பதும் இல்லை பலம் மிக மாநில அரசுகளைக் கவிழ்க்க ஆயுதம் தாங்கிய தீவிரவாதிகளை ஊக்குவித்ததும் உண்டு.

கடந்த மூன்றுமாத கால

யுள்ள நாடு ஒன்று கூட தன்னிச்சையாக செயற்பட முடியாத இரு நாடுகளுக்கு இடையிலான விவகாரங்கள், சர்வதேச நெறிமுறைகள் கடைப்பிடிக்க வேண்டிய விவகாரங்கள், மாநில அரசாங்கங்களுக்கு இடையிலான விவகாரங்கள் என்பவற்றை தனது முதன்மையான அரசியல் பிரச்சினையாக்கினார்.

மேலும் இந்தியா மூன்றாம் உலக நாடுகளின் பெரும் கடன் சுமையில் மூழ்கியுள்ள நாடு. இந்திய அரசாங்கம் வெளிநாடுகளில்இருந்து சுமார் 1,20,0000 கோடி ரூபாவும், உள்நாட்டில் 8,20000 கோடி ரூபாவும் கடனுடன் தத்தளிக்கும் நாடு. அத்தோடு அரசியலில் ஸ்திரமில்லாத சிறுபான்மை அரசாங்கமும், தேசிய இனப் போராட்டங்களினாலும் அல்லலுறும் நாடு. இதன் மூலம் சுயேச்சையாகவும் இறைமையுடனும் உள்நாட்டு விவகாரங்களிலும், வெளிநாட்டு விவகாரங்களிலும் சுயமாக முடிவுகள் எடுக்க முடியாமல் வெளியாரின் அழுத்தத்திற்கும் உள்நாட்டு அழுத்தங்களுக்கும் முகம் கொடுக்கும் நாடு.

## ஜெயலலிதாவின் ஏமாற்றம்

கடந்த தேர்தலில் காங்கிரஸ்கட்சி தனிப்பெரும் கட்சியாக வெற்றிபெற்றிருப்பினும் அறுதிப் பெரும்பான்மையைப் பெறத்தவறியமை தம்மைப் பொறுத்தவரையில் சாதகமான சூழ்நிலையே உருவாகியுள்ளது என்றே ஜெயலலிதா முதலில் கருதினார். மத்தியில் காங்கிரஸ் அறுதிப் பெரும்பான்மையைப் பெறாமையினால் எப்படியும் தமது ஒத்துழைப்பு அவர்களுக்கு அவசியமென்பதும், ஆகையினால் அமைச்சரவையில் தமக்கு இடம் அளிக்கப்படும் என செல்வி ஜெயலலிதா எண்ணியிருந்தார். அதற்குதமிழக காங்கிரஸ்கட்சித் தலைவர் வாழப்பாடியின் செல்வாக்கும், அவர் தலைமையில் அ. தி. மு. க. கூட்டுடன் தமிழகத்தில் காங்கிரஸ் பெற்ற வெற்றியும் உதவும் என அவர் கருதினார்.

ஆனால் அவரின் எதிர்பார்ப்பை மூன்று முக்கிய விவகாரங்களை பிரச்சினையாக்கினார்.

## இலங்கைத் தமிழர் விவகாரம்

தி. மு. க. ஆட்சிக் கவிழ்ப்பிற்கு உதவுவதற்காக விடுதலைப் புலிகளுக்கும் இலங்கைத் தமிழருக்கும் எதிராக கடைப்பிடித்த கொள்கையை ராஜீவ்காந்தியின் கொலையைத் தொடர்ந்து செல்வி ஜெயலலிதா தீவிரப்படுத்தினார். இதனால் தேர்தல் ரீதியில் நன்மைகளையும் அடைந்தார் ஆனால் ஆட்சிக்கு வந்த பின்னர் அகதிகளைத்திருப்பி அனுப்புவோம், புலிகளை இல்லாது ஒழிப்போம் என்ற கோசங்கள் தனது கைக்கு அப்பாற்பட்ட விடயம் என்பதை அவர் முதலில் விளங்கிக் கொள்ளவில்லை.

அகதிகள் விவகாரம், தற்பொழுது உடனடியாக ஒரு பிரச்சினையல்ல. எண்பதுகளின் ஆரம்பத்தில் இருந்து உருவான பிரச்சினையாகும். இப்பிரச்சினைக்கு சிறிலங்கா அரசாங்கத்தினர் நடவடிக்கைகள் காரணமாக இருப்பினும், இதில் இந்தியாவிற்கும் குறிப்பிடக்கூடிய பங்குண்டு போராளிகள் விவகாரமும் அவ்வாறானதே.

ஆனால் தற்பொழுது அகதிகள் விவகாரம் சிறிலங்கா இந்தியா ஆகிய நாடுகளுக்கு உட்பட்ட விவகாரமாக மட்டும் அல்லாமல் சர்வதேச விதிமுறைகளுக்கும் உட்பட்ட விவகாரமாகவும்மாறியுள்ளது.

இதனை செல்வி ஜெயலலிதா புரிந்துகொள்ள சிறிது தாமதமானது.

இறுதியில் அகதிகளைத் திருப்பி அனுப்புதல் இரு நாடுகளுக்கு இடையில் உள்ள விவகாரம்என்பதும்இவ்விடயத்தில் அதிகாரம்எதுவுமற்ற மாநிலங்களினால் எதையும் மேற்கொள்ளமுடியாது என்பதை அவர் புரிந்து கொண்டுள்ளார். இந்நிலையில் அகதிகள் விவகாரத்தை மத்திய அரசாங்கமே கவனித்துக்கொள்ளுதல்வேண்டும் என்ற நிலையை அவர் ஏற்றுக்கொண்டாக வேண்டிய நிலை உருவானது.

எடுத்துக்கொண்டதன் மூலம் மத்தியிலுள்ள சிறுபான்மை அரசாங்கத்திற்கு நேரடியாக தலையிடியைக் கொடுக்கவும். தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கட்சிக்குள் நெருக்கடியை வளர்க்கவும் ஜெயலலிதா முயன்றார்.

இவ்விவகாரத்தில் மத்தியிலுள்ள சிறுபான்மை அரசாங்கம் தனது கோரிக்கைக்குச் செவிசாய்த்தே ஆகவேண்டும் என செல்வி ஜெயலலிதா நம்பினார். காங்கிரஸ் கட்சியின் தமிழ் நாட்டுக் இளையின் தலைமையும் தமக்கு ஆதரவாக இருந்தமையால் அவரது நம்பிக்கை பலமானதாக இருந்தது.

ஆனால், சிறுபான்மை அரசாங்கத்தின் பிரதமரான நரசிம்மராவ் காங்கிரஸ் ஆட்சி

## ஜெயா

பிலுள்ளகர்நாடகமாநிலத்தை எதிர்த்துக் கொண்டு தமிழ் நாட்டு அரசாங்கத்திற்கு ஆதரவான முடிவை எடுக்கவில்லை. இது நரசிம்மராவ் கொடுத்த இரண்டாவது அடியாகும், தமிழ்நாட்டு காங்கிரஸிற்குள் உள்ள ஒரு பகுதியினரின் ஆதரவும் கர்நாடகத்தில் உள்ள காங்கிரஸ் கட்சியின் ஆட்சியுமே தமிழ் நாடு அ. தி. மு. கவை விட தமக்கு தேவை என்ற ரீதியில் பிரதமர் நரசிம்மராவின் முடிவு அமைந்திருந்தது.

இவ்விவகாரத்தின் மூலம் அ. தி. மு. கவினருக்கு மத்தியில் இருந்து விட்டுக்கொடுப்புக்கள் இடம்பெறாது என்ற நிலையைத்தெளிவாக உணர்த்தியது. ஆனால் இதனை அனுபவம் வாய்ந்த அரசியல்வாதியான நரசிம்மராவ் வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளவில்லை. வழமையான நடவடிக்கைபோன்றே பிரச்சினையை ஆறப்போடுதல் மூலம் தணியவைக்க முற்பட்டார். பிரச்சினைத்தீர்வை உயர் நீதிமன்றத்திடம் விட்டார். இந்நிலையில் செல்வி ஜெயலலிதாவின் காவிரிநீர் விவகாரம் தவிர்க்க முடியாத வாறுதள்ளிப்போடப்பட்டது.

தொடர்பாக மத்திய அரசாங்கம் எதுவித நடவடிக்கையையும் இதுவரை எடுக்கவில்லை. பெரும்பாலும் இனிமேலும் எடுக்கப் போவதில்லை. நேரு குடும்பத்தின் சிறப்பு மிக்க ஊழியரான தற்போதைய பிரதமர் நரசிம்மராவ் எது எப்படி வரினும் ஒருபோதும் இந்திரா காந்தி அவர்களால் செய்யப்பட்ட ஒப்பந்தம் ஒன்றை ரத்துச் செய்து கச்சதீவு பிரச்சினையை மீண்டும் புதுப்பிக்க மாட்டார்.

மேலும் அதன் மூலம் புது விவகாரம் ஒன்றை ஆரம்பித்து நெருக்கடிகளை வளர்த்துக் கொள்ளவும் மாட்டார். இதனை அவரே அண்மையில் வெளிப்படையாகக்கூறியுமுள்ளார். ''எங்களுக்குள் பல பிரச்சினைகள் எழுந்துள்ளமையால் தற்பொழுது நாம் இலங்கைப் பிரச்சினையில் தலையிட முடியாது'' என புரன்ட்லைன் சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியில்தெரிவித்துள்ளார். இவரின் இக் கூற்றானது இந்தியா தற்பொழுது உள்விவகாரங்களில் தீவிர கவனம் கொண்டுள்ளதே ஒழிய ராஜீவ் காந்தி காலத்தைப் போன்று உள்விவகாரங்களை விட்டு வெளிவிவகாரங்களில் கூடிய அக்கறை செலுத்தவில்லை என்பது தெளிவாகக்காட்டுகிறது இந்நிலையில் தமிழக முதலமைச்சரின் கச்சதீவு விவகாரத்தில் மத்திய அரசின் ஆவல் குறைவாகவே இருக்கும் என்பதைத் தெளிவாகக்கூறலாம்.

## புலிகளுக்கு எதிரான நடவடிக்கை

இலங்கை அகதிகள் விவகாரம் தமது அதிகாரத்திற்கு அப்பாற்பட்ட விவகாரமாக இருப்பினும் தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கை என்ற போர்வையில் இலங்கைத் தமிழருக்கு எதிரான நடவடிக்கையில் செல்வி ஜெயலலிதா தீவிரமாகவேயுள்ளார்.

கடலோரக் காவற்படை, சிறப்புப்படைப் பிரிவுகள் என்பனவற்றை அமைத்து இலங்கைத் தமிழருக்கு எதிரான, குறிப்பாக புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்



சிறிது சிறிதாக தமது எதிர்ப்பைக் காட்டத் தொடங்கியுள்ளன.

தமிழக முதலமைச்சர் இந்த எதிர்ப்பையும் அடக்குவதற்காக தேசிய பந்தோபஸ்துச் சட்டத்தினை அமல் படுத்தியுள்ளதோடு, 1911 ஆம் ஆண்டு பிரித்தானியரால் அமுல்படுத்தப்பட்ட தேசவிரோதச் சட்டத்தையும் அமல்படுத்த ஆலோசித்து வருவதாகத் தெரிகின்றது.

மத்திய அரசு எப்பொழுதும் ஜனநாயக ரீதியான ஆட்சியாளருக்குத்தான் உதவும் என்பதும் இல்லை பலம் மிக்க மாநில அரசுகளைக் கவிழ்க்க ஆயுதம் தாங்கிய தீவிரவாதிகளை ஊக்குவித்ததும் உண்டு.

கடந்த மூன்றுமாத கால அனுபவத்தைக் கொண்டு செல்வி ஜெயலலிதா தனது எதிர்கால அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் நல்லது. அதிகாரமற்ற மாநிலங்களுக்குள் பிரச்சினையை உருவாக்கலாமே ஒழிய தீர்த்துக் கொள்ள முடியாது இறுதியில் அவர் உருவாக்கிய பிரச்சினைகளே அவருக்கான எதிரிகளாக பூதாகரமாக வளர்ந்து நிற்கும் இதுவே இந்திய வரலாறு

# புலிகளுடன் தொடர்பு; கடும் நடவடிக்கை

### -ஜெயலலிதா

''விடுதலைப்புலிகளுடனோ அல்லது வேறு எந்த தேச விரோத சக்திகளுடனோ தொடர்பு வைத்திருப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா எச்சரித்துள்ளார்.

சட்டப் பேரவையில் நேற்று முன்தினம்பேசிய ஜெயலலிதா விடுதலைப் புலிகளுடன் தொடர்புவைத்திருந்ததற்காக புதுக்கோட்டைமாவட்டத்தில் பாடசாலை ஆசிரியர்ஒருவரும் வன்முறையில் ஈடுபடமுயன்றதற்காக பதினொரு பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்றும் தெரிவித்தார்.

வேலூர் மத்திய சிறையிலிருந்து காவல் துறையினரால் அழைத்து வரப்பட்ட இலங்கைத் தமிழ் அகதிகள் இரண்டு பேர் தப்பியது தொடர்பாக ஆயுதப் படைக்காவலர்கள் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள் என்றும் ஜெயலலிதா தெரிவித்தார்.

இந்த மாதம் 19ஆம் திகதி கடலில் காணாமல்போன இராமேஸ்வரம் மீனவர்கள் இருபத்திநான்கு பேர்களை யும் நான்கு படகுகளையும் தேடும் பணி நடைபெற்று வருவதாகவும்,

கோடிக் கரையில் இந்த மாதம் 23 ஆம் திகதி கரை ஒதுங்கிய படகில் இவர்களில் நான்கு பேர்களது அடையாள அட்டைகள் மட்டும் கிடைத்தன என்றும் சிறிலங்கா கடற்படையினர் இவர்களை பிடித்து வைத்துள்ளார்களா என்பதை அறிய மத்திய அரசின் மூலம் சிறிலங்காவிலுள்ள இந்தியத் தூதுவர் அந்நாட்டு அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும்ஜெயலலிதாதெரிவித்தார்.

## பெற்றுக் கொள்ளவும்

மரியதாஸ் நெல்சிஸ்தாஸ் அமலதாஸ் என்னும் மயிலிட்டிப் பகுதியைச் சேர்ந்தவரது தேசிய அடையாள அட்டை வீதியில் கிடக்க கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

அமெரிக்க குறுந்தூர ஏவுகணை

# அணுவாயுதங்களை அழித்து விட ஜோர்ஜ் புஷ் பணிப்பு

(வாஷிங்டன்)

உலக முறைமையில் ஏற்பட்டிருக்கும் திடீர் மாற்றங்களுக்கு ஏற்ப அநேக மாறுதல்களைச் செய்யப் போவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் அறிவித்துள்ளார்.

நேற்றுக் காலை தமது ஓவல் அலுவலகத்தில் இருபது நிமிடங்கள் உரையாற்றிய ஜோர்ஜ்புஷ் உலக மாற்றங்களுக்கு ஏற்ப சில மாறுதல்களை செய்யப்போவதாகவும், அதன் முதற்படியாக உலகெங்கிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் அமெரிக்காவின் குறுந் தொலைவு ஏவுகணை அணு ஆயுதங்களை அழித்து விடுமாறு தனது நிர்வாகத்திற்கு உத்தர விட்டுள்ளார்.

போர் முக்கியத்துவம் வாய்ந்த குறுந்தூர ஏவுகணைகள் போன்ற அணு ஆயுதங்களை அமெரிக்க போர்க் கப்பல்களில் இருந்தும், நீர் மூழ்கிக் கப்பல்களில் இருந்தும், அகற்றுமாறும்

அணுசக்தி ஆலை இயக்கும் சகல பீரங்கி குண்டுகளையும், குறுந் தொலைவு பாய்ந்து தாக்கும் ஏவுகணை ஆயுதங்களையும் அமெரிக்காவிற்கு கொண்டு வந்து அழித்து விடுமாறும்,

நேட்டோ பாதுகாப்பிற்கு மிகவும் தேவைப்படக் கூடிய வானில் இருந்து தாக்கும் அணு ஆயுதங்களை மட்டுமே வைத்திருக்கப் போவதாகவும், அமெரிக்காவின் குண்டு வீச்சு விமானங்கள் யாவும் உடனடியாக தரையிறக்கப் பட்டு விடும் என்றும்,

அமெரிக்க ஜனாதிபதி தனது உரையில் தெரிவித்துள்ளார். இதற்கான சகல நடவடிக்கைகளையும், ஆணைகளையும் தாம் விடுத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதே நேரம் சோவியத் யூனியனிடமும், அந்த நாட்டின் தரையில் இருந்து செலுத்தும் சகல அணு ஆயுதங்களையும் அழித்து விடுமாறும், நடமாடும் ஏவுகணைகளை அவற்றின் கோட்டைக்குள் அடைத்து விட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

ஜோர்ஜ் புஷ்ஷின் அறிவித்தல்களை, உலகத் தலைவர்கள் பலரும் பாராட்டியுள்ளனர். பிரான்சிய ஜனாதிபதி மித்ரோன், சோவியத் யூனியனின் வெளியுறவு அமைச்சர் பொரிஸ் பாங்கின், ரஷ்யக் குடியரசுத் தலைவர் பொரிஸ் எல்சின், ஐ.நா. சபைத் தலைவர் ஆகியோர் தமது வாழ்த்துக்களையும் ஆதரவையும் தெரிவித்துக் கொண்டனர்.

## திருச்சி மாவட்டத்திற்கு அகதிகள் மாற்றம்

(திருச்சி

திருச்சி மாவட்டத்தில் 8584 இலங்கைத் தமிழ் அகதிகள் பல்வேறு அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர். விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் செய்தியாளர்களிடையே இதனைத் தெரிவித்த அவர் தஞ்சாவூர் மாவட்டத்தில் இருந்து சென்ற புதன்கிழமை வரை 366 அகதிகள் திருச்சி மாவட்டத்திற்கு வந்து சேர்ந்ததாகத் தெரிவித்தார்.

திருச்சி மாவட்டத்தில் இவர்களைத் தங்க வைப்பதற்காக ஏற்கனவே 1066 முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றும், 250 முகாம்கள் அமைக்கப்பட வுள்ளதாகவும், இதுவரை 6914 பேர் பெயர்களை பதிவு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## 1061 இலங்கை அகதிகள் முகாம்கள் மாற்றம்

(சென்னை)

தமிழகத்தில் 1061 இலங்கைத் தமிழ் அகதிகள் வேறு முகாம்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் உள்ள தூத்துக்குடிக்கு அருகே இருக்கும் கரையோர அகதி முகாம்களில் இருந்து 1061 பேர் காமராஜர் மாவட்டத்தில் உள்ள அகதி முகாம்களுக்கும் அண்ணா மாவட்ட அகதி முகாம்களுக்கும் இடம் மாற்றப்பட்டுள்ளனர்.

கரையோர அகதி முகாம்களை அகற்றுதல் என்ற தமிழக அரசின் தீர்மானத்திற்குப் பின்னர் இடமாற்றம் செய்யப்பட்ட அகதி முகாம்கள் இவை ஆகும்.

## இலங்கை அகதிகள் விவகாரம்;

இராணுவத்திற்கு

மாவட்டத்தில் கடந்த ஒரு மாத காலமாக நடந்த ராணுவ நடவடிக்கைகளின் போது ஐந்து அதிகாரிகளும் எழுபத்து நான்கு இராணுவத்தினரும் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு பலியானதாக நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்க தெரிவித்தார். மேலும் இருநூற்றுத் தொண்ணூற்றேழு இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளனர் என்றும் கூறினார்.

ஆனால் இராணுவத்தரப்பினர் ஒப்புக்கொண்ட இத் தொகையைவிடப் பலமடங்கு உயிரிழப்பு ஏற்பட்டிருக்கலாம்

## கலைஞர்கள் கலந்துரையாடல்

(குருநகர்)

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம் இன்று (29-9-91) மாலை 4.30 மணிக்கு யாழ் மாவட்ட சகல கலைஞர்களுக்கும் கலந்துரையாடல் ஒன்றை நடாத்த ஏற்பாடு செய்துள்ளது

யாழ். மாவட்ட கலை, பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் திரு சி. சிட்டு தலைமையில் புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தில் நடைபெறும் மேற்படி கருத்தரங்கில் சகல கலைஞர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. 21)

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மட்டக்களப்பு அம்பாறை மாணவர்களுக்கான பொதுக் கூட்டம் இன்று 29 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு செல்வநாயகம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து மாணவர்களையும் தவறாது சமூகந்தருமாறு மட்டக்களப்பு, அம்பாறை மாணவர் ஒன்றியம் கேட்டுக் கொள்கிறது.

## பயன்படாத நிலையில் புதிய எக்ஸ்ரே இயந்திரம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வைத்தியசாலைக்கென கொண்டுவரப்பட்ட எக்ஸ்ரே இயந்திர உபகரணத் தொகுதி கொழும்பிருந்து கொண்டு வரப்பட்ட போதும் தொழில் நுட்ப நிபுணர்கள் அனுப்பிவைக்கப்படாத நிலையில் பயன்பாடற்ற நிலையில் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவ் வைத்தியசாலைக்கு தேவையான வைத்தியர்கள், ஊழியர்கள் உட்பட அம்புலன்ஸ் வண்டிகளுக்கும் பெரும் பற்றாக்குறை நிலவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

காரைநகரில்

வெளித் தொடர்புகளற்ற நிலையில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தங்கி இருக்கின்றனர். இவர்களுக்கு மரக்கறி வகைகள் கிடைப்பதில்லை. மீன் வகைகளையே

## தடகள போட்டிகள் நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபன் நினைவு தடகள விளையாட்டு விழாவின் மாவட்ட மட்டத்திலான போட்டிகள் நேற்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகியது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் நடாத்தப்படும் இவ் விளையாட்டு விழாவை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. மாறன் மங்கள விளக்கேற்றி தேசியக் கொடியையும் ஏற்றி வைத்து விளையாட்டுப் போட்டியை ஆரம்பித்து வைத்தார்.

போட்டியின் ஆரம்பத்தில் தியாகி திலீபன் தியாக மரணமடைந்த நல்லூர் வீதியில் இருந்து தியாக தீபம் விளையாட்டு மைதானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இத்தடகள விளையாட்டு விழா இன்றுடன் நிறைவடைகிறது (க

## தமிழக தென் கரையில் 34 சோதனை நிலையங்கள்

தமிழகத்தின் தென் கரையில் நவீன ஆயுதங்கள் உபகரணங்களுடன் பொருத்திய 34 சோதனை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய ரிசேவ் பொலிஸ் படையைச் சேர்ந்த பத்து பொலிஸ் குழுக்களும், பத்து விசேட குழுக்களும் தமிழகத்தினுள் விடுதலைப் புலிகள் புகுந்து கொள்ளா வண்ணம் கண்காணிப்பில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர் என்றும்,

தமிழகக் கரைகளில் மீனவர் நடமாட்டமும் தீவிரமாக கண்காணிக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஆதாரம் காட்டிப் பெறவும்

பொதுமக்களிடமிருந்து திருடர்களால் திருடப்பட்ட பல துவிச்சக்கர வண்டிகளை விடுதலைப்புலிகள் மீட்டெடுத்துள்ளனர் இத் துவிச்சக்கர வண்டிகளின் உரிமையாளர்கள் தகுந்த ஆதாரங்களைச் சமர்ப்பித்து சாவகச்சேரியில் மாவட்டச் செயலகத்தில் இருந்து பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. (க)

யுத்தம்

கொண்டு நாம் போராடவில்லை. எமது சொந்த மண்ணில் நின்று கொண்டு, எமது மொழியைப் பேசிக்கொண்டே நாம் போராடுகிறோம் என்றார்.

மணலாற்றில் தற்போது இடம் பெற்று வரும் போர் முக்கியமானது. 83 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பெருமளவில் சிங்களக் குடியேற்றம் செய்யப்பட்ட இடம் இந்த மணலாறு மாவட்டமாகும். தற்போது சிங்கள அரசு இந்த மணலாறு மாவட்டத்தில் தொடுத்துள்ள யுத்த நடவ

தொடர்ந்து அவர் பேசும் போது திருகோணமலை தான் தமிழீழத்தின் தலைநகரம் என்பதை எமது மக்கள் தெளிவாகத் தெரிந்து வைத்திருக்க வேண்டும், அங்கு எமது கொடி பறக்க வேண்டும் அந்தக் கனவுடன் மக்கள் இருக்க வேண்டும். பல தடவைகள் பேச்சு வார்த்தைகள் வரும், போகும் ஆனால் எமது மக்கள் இறுதி இலட்சியத்தில் உறுதியாக இருக்க வேண்டும் என்றார். அவர் தியாகி திலீபனைப் பற்றிக் குறிப்பிடும் போது நல்லூரில் அவர் உண்ணா நோன்பிருந்த

தமிழகத்தில் 1061 இலங்கைத் தமிழ் அகதிகள் வேறு முகாம்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

சிதம்பரனார் மாவட்டத்தில் உள்ள தூத்துக்குடிக்கு அருகே இருக்கும் கரையோர அகதி முகாம்களில் இருந்து 1061 பேர் காமராஜர் மாவ[illegible] அகதி முகாம்களுக்கும் இடம் மாற்றப்பட்டுள்ளனர்.

கரையோர அகதி முகாம்களை அகற்றுதல் என்ற தமிழக அரசின் தீர்மானத்திற்குப் பின்னர் இடமாற்றம் செய்யப்பட்ட அகதி முகாம்கள் இவை ஆகும்.

## இலங்கை அகதிகள் விவகாரம்;

# கொழும்புடன் டில்லி தொடர்பு கொண்டுள்ளது

(சென்னை)

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவது குறித்து சிறிலங்கா அரசுடன் மத்திய அரசு தொடர்பு கொண்டுள்ளது என்று தமிழக நிதியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

நேற்றுச் சட்டப்பேரவையில் மறுவாழ்வு மானியக் கோரிக்கையை தாக்கல் செய்து பேசிய அவர் இது தொடர்பாக மத்திய அரசிடம் இலங்கை அரசு சில விபரங்களை கோரியுள்ளதை அடுத்து தமிழக அரசிடம் மத்திய அரசு கோரியிருந்த அந்தத் தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

தமிழக அரசின் உத்தரவுப்படி காவல் நிலையங்களில் பதியத் தவறிய 1523 இலங்கைத் தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், இவர்களில் 529 பேர் சிறப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் மீதிப் பேர் விடுவிக்கப்பட்டனர் என்றும் நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

---

சகல

பருப்பு ஆகியவை வழங்கப்படவுள்ளன. இவற்றை கட்டுப்பாட்டு விலைக்கு ப. நோ. கூ. சங்கங்கள் விற்பனை செய்யும் எனவும் கையிருப்பைப் பொறுத்து தொடர்ந்தும் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

---

குற்றச்சாட்டு

சாதாரண பாராளுமன்ற சம்பிரதாயமாகும். பெயர் திகதி இன்றி மொட்டையாக ஒரு ஆவணத்தைப் பகிரங்கப்படுத்துவது சபாநாயகரின் கௌரவத்துக்கும், சபையின் உரிமைகளுக்கும், இறைமைக்கும் எதிரானது என்று சுட்டிக் காட்டியுள்ளார்

---

தொண்டமான்

வேண்டிய காலம் இது. இந்நிலையில் புலிகளுடன் பேச தொண்டமான் முயற்சிப்பதும் ஒரு வகை நடவடிக்கை ஆகும். இதில் என்ன தவறு இருக்கிறது? யுத்தம் என்றென்றும் நீடிக்கத்தான் வேண்டுமா? ஏன் அமைதி தோன்றக் கூடாது? என சபையில் கேள்வி எழுப்பினார்.

---

## கோட்ட ஆசிரியர் தினவிழா

மருதனாமடம் கோட்ட ஆசிரியர்தின விழா நாளை மாலை 3.00 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் யாழ். பிரதேசக் கல்விப்பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

---

நடைபெற்ற [illegible] மாநாட்டில் இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்க தெரிவித்தார். மேலும் இருநூற்றுத் தொண்ணூற்றேழு இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளனர் என்றும் கூறினார்.

ஆனால் இராணுவத்தரப்பினர் ஒப்புக்கொண்ட இத்தொகையைவிடப் பலமடங்கு உயிரிழப்பு ஏற்பட்டிருக்கலாம் என்றும், குடிநீர்கூடக் கிடைக்காமல் இராணுவம் அவதிப்பட்டது என்றும் பி.பி.ஸி கூறியது

---

யுத்தநிறுத்தம்

முகாம்களுக்கு இராணுவத்தினர் திரும்பியுள்ளதாகவும், எதிர்கால இராணுவ நடவடிக்கைகள் குறித்து திட்டமிடப்பட்டுவருவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் நேற்றும் விமானக்குண்டு வீச்சுக்களும், எறிகணைத் தாக்குதல்களும் நடாத்தப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் சிறிலங்கா இராணுவம் போர் நிறுத்தம் செய்யும் என்ற பேச்சுக்கே இடமில்லை. புலிகளின் எஞ்சியுள்ள முகாம்களை அழிக்கும் வரையில் போர் தொடரும். நேற்றும் கூட விமானக்குண்டு வீச்சுக்களும், எறிகணைத் தாக்குதல்களும், பீரங்கித் தாக்குதல்களும் நடாத்தப்பட்டன. இவ்வாறு சிறிலங்கா இராணுவ அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

---

உள்ளூர்

இந்தமாதம் 26 ஆம் திகதி பாராளுமன்றத்தில் அவசரகாலச் சட்டத்தின் மீதான வாக்கெடுப்பில் ஈரோஸ் உறுப்பினர்கள் அதற்கு ஆதரவாக வாக்களித்தார்கள் என்பதை ஜனாதிபதி செயலகம் மக்களுக்கு நினைவுபடுத்துகின்றது எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உள்ளூர்ப்பத்திரிகைகளில் வெளிவந்த ஈரோஸ் உறுப்பினர்கள் நிபந்தனையற்ற விதத்தில் யுத்த நிறுத்தத்தை செய்யுமாறு அரசாங்கத்தை கேட்டதாக வந்த செய்தியில் எந்தவித உண்மையும் இல்லை என்று அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டது.

---

மேலும் அவ் வைத்தியசாலைக்கு தேவையான வைத்தியர்கள், ஊழியர்கள் உட்பட

காரைநகரில்

வெளித் தொடர்புகளற்ற நிலையில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தங்கி இருக்கின்றனர். இவர்களுக்கு மரக்கறி வகைகள் கிடைப்பதில்லை. மீன் வகைகளையே இவர்கள் பயன்படுத்திவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

ஓராண்டு

வேண்டும். தமது சுயமுயற்சியில் எழுதப்பட்டதென்ற உறுதி மொழியுடன் சிறுகதைகளை அனுப்பி வைத்தல் வேண்டும். எழுத்துத்தாளில் எட்டுப் பக்கங்களுக்கு மேற்படாமல் அமைதல் வேண்டும்.

கவிதைகள் மரபுக் கவிதைகளாகவோ அல்லது புதுக் கவிதைகளாகவோ இருக்கலாம். ஒலி பரப்பும் நேரம் மூன்று நிமிடங்களுக்கு குறையாமலும், ஐந்து நிமிடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். ஆக்கங்கள் தனது சுய முயற்சி என்பதையும், கவிதைகள் இதற்கு முன் எவ்வகையிலும் வெளிவராததாக இருப்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்.

ஆக்கங்கள் யாவும் எமது போராட்டத்தை மையப்படுத்தியோ அல்லது முன்னெடுத்துச் செல்வதாகவோ அல்லது சமூக மேம்பாடு கருதியதாகவோ அமைதல் வேண்டும்.

---

வயோதிபத்

கள் விடுதலை செய்யப்பட்டு உறவினர்களிடம் வந்து சேர்ந்துள்ளார்கள்.

வெற்றிலைக்கேணியில் கடந்த யூலை மாதம் 14 ஆம் திகதி இராணுவம் தரையிறங்கிய போதே, அந்த இடத்தைச் சேர்ந்த வயோதிபத் தம்பதிகள் இராணுவத்திடம் சிக்குண்டார்கள்.

மா. குசைப்பிள்ளை (வயது 75) திருமதி கு. மரியப்பிள்ளை (வயது 65) ஆகிய வயோதிபத் தம்பதிகளே இராணுவத்திடமிருந்து மீண்டு வந்தவர்களாவார்கள். (36)

---

றார்.

மணலாற்றில் தற்போது இடம் பெற்று வரும் போர் முக்கியமானது. 83 ஆம் ஆண்டிற்குப் பின்னர் பெருமளவில் சிங்களக் குடியேற்றம் செய்யப்பட்ட இடம் இந்த மணலாறு மாவட்டமாகும். தற்போது சிங்கள அரசு இந்த மணலாறு மாவட்டத்தில் தொடுத்துள்ள யுத்த நடவடிக்கைக்கு நான்கு காரணங்கள் உள்ளன. ஒன்று, ஆனையிறவுச் சண்டையில் நாம் பலவீனம் அடைந்து விட்டோம் என்று சிங்கள அரசு கருதுகிறது. இரண்டாவது எமது பிரச்சினைபற்றி இந்தியாவின் தற்போதைய நிலைப்பாடு, மூன்றாவது கொழும்பில் அரசுக்குஏற்பட்டுள்ள பிரச்சினையிலிருந்து இராணுவத்தின் கவனத்தை திசை திருப்புவது நான்காவது, தாயகத்தைத் துண்டாடும் நோக்கம்.

எமது எல்லைப் புறங்களில் இராணுவ முகாம்கள் அமைத்து விட்டால் தான் எமது பிரதேசத்தை கைப்பற்றி விட்டதாக சிங்கள அரசு எண்ணுகிறது. ஆனால் அமைக்கப்படும் இராணுவ முகாம்கள் அவர்களுக்கேபுதைகுழிகளாக அமையும் என்றார்.

அவர் மேலும் பேசும் போது சிங்களஅரசினாலும் அரசசார்பற்ற நிறுவனங்களினாலும் மடுவில் அமைக்கப்பட்டுள்ள அகதி முகாம்போல பல முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. சொந்த இடங்களிலிருந்து இடம் பெயர்ந்து சென்று இந்தமாதிரி அகதி முகாம்களில் தங்கியுள்ள மக்களை, பிச்சைக்குடியமாக்கி சுயமாகத் தொழில் செய்து வாழவிடாமல் அவர்களை தன்னம்பிக்கை அற்றவர்களாக்கி, போராட்டத்திலிருந்து அந்நியப்படுத்தி போராட்ட எண்ணத்தை மழுங்கடிக்கச் செய்வதே அவற்றின் நோக்கம் அவற்றின் தேவை முடிந்தபின் எமது மக்கள் அம்போ என்று விடப்படுவார்கள். இந்த அகதி முகாம்களோ, இப்போது உதவி புரியும் நிறுவனங்களோ எம்மை வழிநடத்தப் போவதில்லை என்றார்.

---

வேண்டும் அந்தக் கனவுடன் மக்கள் இருக்க வேண்டும். பல தடவைகள் பேச்சு வார்த்தைகள் வரும், போகும் ஆனால் எமது மக்கள் இறுதி இலட்சியத்தில் உறுதியாக இருக்க வேண்டும் என்றார். அவர் தியாகி திலீபனைப்பற்றிக் குறிப்பிடும் போது நல்லூரில் அவர் உண்ணா நோன்பிருந்த அந்தப் பன்னிரண்டு நாட்களும், பலர் அவன் முன் கவிதை பாடினார்கள். அவனது வரலாறு வாசிக்கப்பட்டது. கருத்துரைகள் வழங்கப்பட்டன. தன் கண்முன்னே இவற்றைக் கேட்டு வீரமரணத்தைத் தழுவிய போராளி திலீபனாகத்தான் இருக்க முடியும்.

அவன் கண்பார்வை தெரியாத நிலையிலும் மக்கள் அணி திரண்டுவிட்டார்களா? போராடத் தயாராகி விட்டார்களா? என்றே நோக்கினான். அவனது இதயதாகமே மக்கள் போராட்டத்திற்கு அணிதிரளவேண்டுமென்பதே.

உலகிலேயே சிறந்த போராளிகளைப் பெற்றுள்ளோம். இதனால் வெல்வோம் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு என்றார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கியஸ்தர்களில் ஒருவராக திரு வாஞ்சிநாதன் அங்கு உரையாற்றும் போது,

திலீபன், இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் அடங்கும் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்தே - அவற்றை நிறைவேற்றும்படி கோரிய போராடினான். அவனது போராட்டம் மூலம் இந்தியாவின் போலித்திரை கிழித்தெறியப்பட்டது.

வன்னிப் பிரதேச மகளிர் அமைப்பின் பொறுப்பாளர் செல்வி ரதி, வவுனியா தெற்கு தமிழ்ப் பிரிவு வட்ட அவைத் தலைவர் திரு க. சிவசுப்பிரமணியம் ஆகியோரும் உரையாற்றினர். இப்பொதுக்கூட்டத்திற்கு விடுதலைப்புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு ஞானம் தலைமை வகித்தார் (தி)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் [illegible] வீதி 81 ஆம் இலக்கத்திலுள்ள "[illegible]" [illegible] 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.